[11th August 1960

THE HON. SRI V. RAMAIAH : இன்றைக்கு இருக்கும் நிலையை பதிலில் சொன்னேன். அம்மாதிரி மோட்டார் வாகனங்களுக்கு வரி உண்டா, இல்லையா என்பது பெரிய கொள்கை அடிப்படைப் பிரச்சினை. அது பரிசீலனை செய்யப்படவேண்டியது. அப்படிப் பரிசீலனை செய்யும்போது, அங்கத்தினர் கருத்துக்களை மனதில் வைத்துக் கொள்வோம்.

SRI N. MARUDACHALAM : விலக்கு அளிக்கும்படி எத்தனை முனிசிபாலிடிகள் கேட்டிருக்கின்றன ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி போடவேண்டும்.

Research on artificial rain

*113 Q—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயற்கை மழை ஆராய்ச்சி எந்தெந்த இடங்களிலே நடைபெற்று வருகிறது ?

(ஆ) 1960-ல் எந்தெந்த ஜில்லாக்களிலே செயற்கை மழை ஆராய்ச்சி செய்ய உத்தேசம் ?

(இ) செயற்கை மழை ஆராய்ச்சி எத்தனை தடவை நடத்தப் பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The experiments on artificial rain making are now being conducted in Coimbatore.

(b) The experiments will be continued during 1960 in the Coimbatore district. The question of conducting experiments in the Tiruchirappalli district is under consideration. Proposals from the Chief Engineer (Irrigation) for conducting experiments in the Nilgiris and Salem districts are awaited.

(c) The total number of times the experiments were conducted is 267.

SRI P. G. MANICKAM : ஸார், மேற்கொண்டு பரிசோதனை செய்வது வெற்றிகரமாக இருக்குமா, திட்டம் உண்மையிலேயே பயன் அளிக்குமா ? சர்க்கார் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த முறையிலே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில்தான் மழை பெய்யச் செய்யமுடியும். ஆனால், அப்படிச் செய்வது, நமக்கு இருக்கும் அவசியம் பூராவுக்கும் உபயோகிக்கும் வகையில் பிரயோஜனப்படுமா என்று தெரியவில்லை. எக்ஸ்பெரிமெண்ட் மூலம் வரவழைக்கலாம் என்று நான் தெரிகிறது.

11th August 1960]

SRI A. GOVINDASAMY : இந்த வகையில் மழை உண்டு பண்ணமுடியுமா, போதுமா, போதாதா என்ற சந்தேகம் இருக்கும்போது, வீண் செலவு ஏன் செய்யவேண்டும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது இதற்குப் பணம் செலவிடவேண்டும் என்பது, ஒரு இடத்தில் ஏதாவது புதையல் இருக்கிறது என்ருல், புதையல் இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்து நிச்சயிக்கவே, நிலத்தைத் தோண்டி, செலவு செய்து பயன் உண்டா என்று பார்க்கவேண்டும் என்பதுபோல் தான்.

SRI M. KALYANASUNDARAM : ஆராய்ச்சிக்கு எத்தனை தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, அந்தத் தொகை போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The rain-making trials are conducted at Coimbatore at a cost of Rs. 5,000 from 1st June for one year and it is being extended from time to time.

SRI R. SRINIVASA IYER : இப்படி ஒரு அங்குல மழை பெய்யவேண்டுமென்று நினைத்தால் அதற்கு எவ்வளவு ரூபாய் செலவு ஆகும் என்ற கணக்கை சர்க்கார் எடுத்திருக்கிருர்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மழையைக் கொண்டு வருவதற்கு முன் அதற்கு முன்பு அந்த இடத்தில் மழை பெய்திருக்க வேண்டும். (சிரிப்பு). அப்பொழுதுதான் இந்த பரீட்சை பயன்படுகிறது. கால்சியம் க்ளோரைட், சோடியம் க்ளோரைட் முதலியவைகளை சுமார் முப்பது அல்லது நாற்பது அடி உயரத்திற்குக் கொண்டுபோய் அங்கே வைக்கக்கூடிய சூழ் நிலையில் மழை பெய்வதற்கு இடம் ஏற்படுகிறது. அப்படி கால்சியம் க்ளோரைட் முதலியவைகளை உபயோகப்படுத்தக்கூடிய அளவில் இவ்வளவு மழை பெய்கிறது என்று கண்டு பிடிக்கப் படுகிறது. அதற்கு முன்பு எவ்வளவு செலவு ஆகும் என்று சொல்வது முடியாது. பரீட்சை செய்து பார்க்கும்போதே இவ்வளவு செலவு ஆகும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

SRI P. G. MANICKAM : இயற்கை மழையைக் கொண்டு வருவதற்கு செய்யப்பட்ட பரீட்சை மூலம் வெளி நாடுகளில் நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் வெற்றி கண்டிருப்பதாக பத்திரிகை மூலமாக அறிகிருேம். அந்த முறையே இந்த நாட்டிலும் அனுஷ்டிக்கப்படுகிறதா அல்லது வேறுமுறை ஏதாவது அனுஷ்டிக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எக்ஸ்பெரிமெண்ட் என்று சொன்னுல் அதில் எல்லாவிதமான முறைகளையும் தான் கையாண்டு பார்ப்பார்கள். அந்த மாதிரி வகையில்தான் இங்கு எக்ஸ்பெரிமெண்ட் செய்துகொண்டு வருகிருேம்.

[11th August 1960

SRI K. VINAYAKAM : May I know, Sir, what are the lessons learnt by this Government in this kind of experiment? Is the cost, labour and time involved commensurate with the rains that are brought to the earth? Will the Government drop this kind of mad experiment?

THE HON. SRI M. A. MANICKAVELU : This is only an experiment. If it succeeds there are great potentialities. One doctor took fourteen years to isolate a particular virus. If the doctor was a man of the hon. Member's temperament he would not have succeeded.

SRI P. U. SHANMUGAM : கனம் விநாயகம் அவர்கள் mad experiment என்று சொன்னார். அப்படிச் சொல்லலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM : This is my view.

MR. SPEAKER : The hon. Member can call any experiment anything.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்த ஆராய்ச்சி மிகவும் சிறந்த ஆராய்ச்சி. அதில் வெற்றி பெற்றால் நம் நாடு பஞ்சம் இல்லாத நாடாகி விடும். நம் நாட்டிலிருந்து பஞ்சத்தை ஓட்டி விடலாம். ஆனால், இந்த ஆராய்ச்சிக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற பணம்தான் கொஞ்சமாக இருக்கிறது. அதற்கு ஒதுக்கி இருக்கக்கூடிய 5,000 ரூபாய் போதாது என்று தோன்றுகிறது. அது ரொம்பவும் குறைவு. அதற்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஒதுக்க சர்க்கார் முன் வரவேண்டும். அப்படி எவ்வளவு வேண்டுமானாலும் ஒதுக்கி வைத்து ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்த வேண்டும். ஆகவே அப்படி அதிகப்படியாக பணம் ஒதுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எக்ஸ்பெரிமெண்ட் பண்ணுவதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் ஒதுக்கலாம். இப்பொழுது ஒதுக்கியிருப்பது போதும் என்று கருதித்தான் அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக வேண்டுமானாலும் ஒதுக்குவதற்கு தேவையான போது யோசிக்கலாம்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether any landlords have protested to the Government that the rains have fallen during the harvest season?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware.

SRI A. GOVINDASAMY : பிரார்த்தனை செய்து அதன் மூலமாக மழை பெய்யச் சொல்லலாம் என்று சொல்லுகிறார்களே, அந்த முறையிலும் அரசாங்கம் பரிட்சை செய்து பார்த்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: பிரார்த்தனை செய்து மழையைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறவர்கள் அதைச் செய்து மழையைக் கொண்டு வந்து கொள்ளலாம்.